"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2008). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2008)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. கோவிந்தசாமி.

@ 11-11-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2008 நவம்பர் 14]

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகள் திருத்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதே நேரத்தில், கட்டுமானப் பொருட்களின் விலையில் ஏற்பட்டுள்ள உயர்வு, பொதுவான பணவீக்கம், வளர்ச்சிப் பணிகளை விரைவுபடுத்துவதற்கான தேவை ஆகிய காரணங்களுக்காக மாநகராட்சி அமைப்புகளுக்கு நிதிநிலை ஆதாரங்களை உயர்த்துவதற்கு அதிகாரம் வழங்கப்படுவதுபோல, சில முக்கியமான முதல் நிலை நகராட்சிகள், Special Grade நகராட்சிகளிலும் இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றையும் அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத் திருத்தத்தோடு, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ஏற்கெனவே நீண்ட நெடுங்காலமாக அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் வாழ்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக, அந்தப் பகுதிகளை முறைப்படுத்துவதற்கு—குறைந்த கட்டணத்திலே—ஓர் அரசு உத்தரவு வெளியிடப்பட்டு, பெரும் பகுதியான மக்கள் இன்றைக்கு அந்தக் கட்டணத்தைச் செலுத்தி, முறைப்படுத்தி வருகிறார்கள். அடிப்படை வசதிகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உருவாகி இருக்கிறது. ஆனால், 10, 15 சதமான மக்கள் அந்த வாய்ப்பை உரிய காலத்திலே பயன்படுத்தமுடியாமல் விடுபட்டிருக்கிறது. இப்போது அவர்கள் ஏதாவது, குடிநீர் இணைப்பு போன்ற வசதிகளுக்கு மனு செய்து செல்லுகிறபோது, நீங்கள் முறைப்படுத்துவதற்கான கட்டணம் செலுத்தவில்லை என்று அந்த மனு நிராகரிக்கப்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, பெரும்பகுதியான மக்கள் பயனடையக்கூடிய அந்த நிலையில், ஒரு சிறு பகுதியினர் விடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, 3 மாத காலம் அவகாசம் வழங்கி அந்த மக்களும் தங்களுடைய அந்தப் பகுதியை முறைப்படுத்திக்கொள்வதற்கான கட்டணம் செலுத்துவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் இங்கே ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர் கேட்டது 3 மாத காலம். 3 மாத காலம் அல்ல, 6 மாத காலம் வழங்குவதற்கு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2008 நவம்பர் 14

அரசு முடிவு செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் *2* முதல் *8* வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் *2* முதல் *8* வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் *2-05*

பிரிவு *1*, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2008 நவம்பர் 14]

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 58/2008). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 58/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின முடிவிற்கு விடப்படுகிறது.

@ 12-11-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS